அ.வ எண் 20/2012 எல்லப்பன் (பிசா2) தேதி:06.02.2023

14 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

அசல் வழக்கு எண்.220/2011 என்ற வழக்கு நான் வாதியாக இருந்து மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்து பின்னிட்டு இந்த நீதிமன்றத்திற்கு மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வழக்கிற்கு பின்னிட்டு இந்த வழக்கை எனது அம்மாவின் சகோதரியுடைய மகள்கள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி இந்த வழக்கை வாதிகள் நான் தாக்கல் செய்துள்ள வழக்கின் சங்கதிகளை மறுத்து தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் நான் எனக்கு பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்துள்ளேன். அவர்கள் அவர்களுடைய பங்கிற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். நான் இந்த வழக்கில் வாதியின் வழக்கை மறுத்து எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆனால் அவர்களுக்கு பங்கு உள்ளது என்று சொல்லியுள்ளேன். எனது தாத்தா ஏ.என்.அய்யப்ப நாயக்கர் எழுதியதாக சொல்லப்பட்ட உயில் அசல் ஆவணத்தை நான் வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 1951 ம் வருடம் பிறந்தேன்.எனது தாத்தா உயில் எழுதியதாக சொன்ன பொழுது எனக்கு 9 வயது என்பதால் அதை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். ஆனால் பின்னிட்டு எனது அம்மா சொல்லி எனக்கு தெரியும். மேற்படி உயில் ஆவணம் மோசடியானது என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகு தான் பட்டா என் பெயரில் மாற்றிக்கொண்டேன் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.20 ஆவணத்தில் பட்டா பெயர் மாற்றம் 2012 வருடம் 3 வது மாதம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். 1960 முதல் 2012 வரை தாவா சொத்துக்களை என்னுடைய அம்மா மற்றும் அவருடைய சகோதரிகள் பெயரில் தாவா சொத்து சம்பந்தமாக வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.20 ஆவணத்தின் படி எங்களுடைய பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்வதற்கு முன்னர் சுப்பா நாயக்கர் மகன் அய்யப்ப நாயக்கர் பெயரில் பட்டா எண்.61 இருந்தது என்றால் சரிதான். பின்னிட்டு ஆவணங்களை காண்பித்து எங்களது பெயரில் பட்டா மாற்றம் பெற்றோம். என்னிடம் காட்டப்படும் பட்டாவானது 2005 ம் வருடம் சுப்பா நாயக்கர் மகன் அய்யப்ப நாயக்கர் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.27 ஆக குறியீடு செய்யப்படுகிறது. சாட்சி மீண்டும்

சொல்கிறார் யூடிஆர் திட்டத்தில் தவறாக காட்டப்பட்டுள்ளது.என்னிடம் காட்டப்படும் அ பதிவேட்டில் தாவா சொத்தானது அய்யப்ப நாயக்கர் பெயரில் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.28 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காட்டப்படும் ரீ சர்வே செட்டில்மண்ட் ஆவணத்தின் படி சர்வே எண்.511/2 சொத்தானது காமாட்சி செட்டியார் பெயரில் உள்ளது என்று சொன்னால் சரிதான். மேற்படி ஆவணம் பி.சா.ஆ.29 ஆக குறியீடு செய்யப்படுகிறது.நான் பட்டா பெயர் மாற்றம் பெரும் பொழுது சொத்தானது 511/2A, 511/2B என்று உட்பிரிவு செய்யப்பட்டிருந்தது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.27 பட்டாவில் சொத்தானது 511/2A, 511/2B என்று காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் பி.சா.ஆ.17 பட்டா 2009ம் வருடம் பெற்றுள்ளேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி பட்டாவில் சொத்தானது 511/2 என்று தான் காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனவே பி.சா.ஆ.17 பட்டாவானது மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தீர்வை ரசீதுகள் வழக்கிற்கு பின்னிட்டவை என்று சொன்னால் சரிதான். எனவே நான் தாக்கல் செய்துள்ள வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சர்வே எண்.511/ 2A, 511/2B சொத்தானது காமாட்சி செட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி காமாட்சி செட்டியாரிடம் சுப்பா நாயக்கர் வாய்மூலமாக கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. சுப்பா நாயக்கர் இறந்தபிறகு அவரது மகன் அய்யப்ப நாயக்கர் பெயரில் பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. பின்பு அய்யப்ப நாயக்கரிடம் இருந்து 14ம் பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி 14ம் பிரதிவாதி சொத்தை 2010ம் வருடம் கிரையம் பெற்றார் என்றும், அதற்கு முன்னர் 14ம் பிரதிவாதி மற்றும் அவரது குடும்பத்தார் சொத்தில் அனுபவத்தில் இருந்து வந்தார் என்றும் சொன்னால் சரியல்ல. 14ம் பிரதிவாதி சொத்தை 14 வருடங்களுக்கு மேலாக எவ்வித இடைஞ்சலும் இன்றி தொடர்ந்து அனுபவம் செய்து வருவதால் அவருக்கு எதிரிடை பாத்தியதை உரிமை ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எங்கள் பெயரில் பட்டா பெயர் மாற்றம் பெரும் பொழுது எனது தாத்தா பெயரில் உள்ள 1944ம் வருட ஆவணத்தை காண்பித்து உத்தரவு பெற்றோம் என்றால் சரிதான். மேற்படி 1944 முதல் 2012 வரை சொத்தில் அனுபவத்தை காண்பிப்பதற்கு ஆவணங்கள் எவையும் நாங்கள்

தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனவே சர்வே எண்.511/ 2A, 511/2B சொத்து குறித்து எனக்கு எந்த பரிகாரமும் கிடைக்கக்கூடியது அல்ல என்று சொன்னால் சரியல்ல.

திறந்தவெளி நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்)R. ரத்தினவேல் பாண்டியன்
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.